நூல் நிலையம்,
சென்னை - 600090.
XX. A. 14

அபிநவ பத்திரிகை.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

பத்திராதிபர்கள். { கு. ரா. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், பி. ஏ.,
நா. ராமாநுஜாசாரியர், எம். ஏ., எல். டி.

புத்தகம் 1.] ஆகஸ்டு மீ 15௳ [சஞ்சிகை 1.

சூசீபத்திரம்.

ம்ருச்சகடிகை	...டி. எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார், பி. ஏ.,	1
விவேகாநந்தசுவாமிகள் சரித்திரம்	ஆ. வ.	18
இராமாயணம் முந்தியதா? மஹாபாரதம் முந்தியதா?	தி. ஈ. ஸ்ரீநிவாஸாசாரியரவர்கள்,	24
சரீரக சாஸ்திரம்	...டி. ஏ. கோபீநாதராவ், எம். ஏ.,	28
சக்கரவர்த்தியாரின் முடிசூட்டு இரட்டைமணிமாலை	வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார், பி. ஏ.	32
வேதாந்தஸாரம்	...நா. ராமாநுஜாசாரியர், எம். ஏ., எல். டி.	36
ஆர்யதர்மசாஸ்திரத்தின்படி விவாகம் இச்சிகமா? அல்லவா?	திவான்பஹதூர். ரு. இரகுநாதராயரவர்கள்.	42
சுதவ்ருச...		

அன்பளிப்பு. திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்கள்

சென்னை:
அபிநவ பத்திரிகை ஆபீஸ்,
85, நாராயண முதலி வீதி.

1902.

வருஷசந்தா ரூ. 3-0-0.] [தனிப்பிரதி ரூ. 0-4-0.

தற்கு மனைவியின் உத்தரவு கேட்கும்பொழுது, தன்னைப் போன்ற மனமுடையவளாக அவளும் இருப்பதைக்கண்டு நிரம்பவும் ஆச்சரியப்பட்டார். பின்னுளில் அவருடைய சிஷ்யையாகவே அவருடன் கூடவிருந்தாள். இவர் ஒரு மதத்தையும் நிந்திப்பதில்லை. உலகத்திலுள்ள எல்லாமதங்களையும் அறிந்து, எல்லாவற்றிலும் பகவதம்சம் கொஞ்சம் கொஞ்ச மிருக்கிறதென்பதை யுணர்ந்து, அதை மற்றவர்க்கும் போதித்தார். இவர் ஒருவருடைய மனக்கொள்கையையும் மாற்ற முயலவில்லை. எம்மதத்தாராயினும், எவ்வருணத்தாராயினும் அவரவரது கொள்கையை விடாது கடைப்பிடித்தொழும்படிக் கற்பித்தார். இவரிடம் அசாத்தியம் என்ற வார்த்தையே சொல்லக்கூடாது, முடியாது என்று உலகத்தோர் நினைத்துவிட்ட காரியங்களையெல்லாம் திரணமாய்நினைத்துப்பேசுவார். இவர் அகங்கார மற்றவர். தான் பிராமணன் என்ற செருக்கு ஒருதடவை இவருக்கு வரவே, அச்செருக்கைப் போக்கிக்கொள்ளவேண்டுமென்று தனது நீண்டமயிரால் ஓர் பறையனுடைய குடிசையை ...க்கினர். இத்தகைய மஹானை யார்தாம் கொண்டாடார்? யார் இவரைக் குருவாகக் கொள்ளாதவர்?"

கல்கத்தாவிலுள்ள ஒவ்வொரு புத்திமானும் இவரை குருவென்று சொல்லிக்கொள்வதிலேயே நிரம்ப பிரியமுடையவர்களாக ...ந்தார்கள். அவரிடமே யிருந்து அவருக்குப்பணிவிடை செய்து ... சிஷ்யர்களுள் முதன்மையானவர் விவேகானந்தஸ்வாமிகள். ... கல்கத்தாவில் காயஸ்த வம்சத்தில் ஏறக்குறைய நாற்பது ...ஷங்களுக்கு முன் அவதரித்தார். இவருக்கு நரேந்திரநாததத்தர் ...றுபெயர். சரியான வயதில் கல்விகற்க ஆரம்பித்து, கல்கத்தா ...ரல்அஸ்ஸம்ப்ளிகாலேஜினின்றும் பி.ஏ. பரீக்ஷையிற்தேறினர். ...கற்றுக்கொண்டிருக்கும்பொழுதே, இவர் இராமகிருஷ்ணபரம ...சரையடைந்து அவரிடம் தத்துவங்களை யுணர்ந்து வந்தார். ...வளவு இளவயதிலேயே இவருக்கு அறிவு முதிர்ந்து விவாகத்... வெறுத்து, துறவறம்பூண்டு, ஆங்கிலத்திலும் ஸம்ஸ்கிருதத்தி...ம் இருக்கும் பல நூல்களைக் கற்றுவந்தார். இவரது பெருமை ...து சிறிதாகப் பரவ ஆரம்பித்தது.

1893 - ம் வருஷத்தில் அமெரிக்கா ஐக்யமாகாணங்களிலுள்ள ...காகோ என்னும் நகரத்தில் மதப்பிரதிநிதி சபை கூடிற்று. அப்பொ

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

ழுது இவர் இந்துமதப்பிரதிநிதிகளுள் ஒருவராக அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டார். அப்பொழுது மூன்று பிரசங்கங்கள் செய்தார். அப்பிரசங்கங்களைக் கேட்ட எல்லோரும் வியந்தார்கள். "இந்து மதம்" என்னும் பெயரிய ஒரு வியாசத்தை வாசித்தார். அங்கே பல மதங்களுக்குப் பிரதிநிதிகளாக வந்திருப்பவர்களை நோக்கி அவரவர்கள் தத்தம் மதந்தான் உயரியது என்று கூறுவது சரியன்றென்பதை உதகரிக்கப் பின்வருமாறு ஒரு சிறிய கதையொன்று சொன்னார்.

ஒரு சிறு கிணற்றில் வெகுநாட்களாக ஒரு தவளை வசித்துகே கொண்டிருந்தது. ஒருநாட்பொழுது மற்றொரு தவளை அக்கிண றூ றில் வந்துசேரவே, பழைய தவளை அதனை நோக்கி "நீ எங்கிரு வருகிறாய்?" என்று கேட்டது.

"நான் சமுத்திரத்திலிருந்து வருகிறேன்." என்று கூறிற்று

"சமுத்திரம் இவ்வளவு பெரிதிருக்குமா?" என்று ஓரடித் விக் குதித்தது.

"இன்னும் பெரிதாயிருக்கும்."

இரண்டடி தாவிக் குதித்து "இவ்வளவு பெரிதிருக்கும என்று கேட்டது.

"அதை அளவிடவே முடியாது" எனவே,

"நீ பொய்சொல்லுகிறாய்" யென்றது.

இவ்வாறே ஒவ்வொருவரும் தானொருமதத்திலிருந்துகொண் பிற மதங்களெல்லாம் தம்மதத்தினும் தாழ்ந்ததென்று சொல் கிறார் என்றார். இக்கதையைக் கேட்ட எல்லோரும் கரகோ செய்து ஆநந்தித்தார்கள்.

சிகாகோ சபை கலைந்தபிறகு, இவர் அமெரிக்காவிலே பல இடங்களுக்குச் சென்று ஆங்காங்கு நமது மதத்தின் பெரு மையையும், பழமையையும், நமது மதத்துக்கும் பிற மதத்துக்கு ள்ள வித்தியாசங்களையும் நன்கெடுத்துரைத்து, நமது மதம்போன் விசாலமானதும் உயர்ந்ததுமான மதம் வேறேதுங் கிடையாதென் பிரசங்கித்திருக்கின்றார், "பல கொள்ளைக்காரர்கள் வந்து ஊரெ லாம் கொள்ளையடித்தும், பலஜாதியார்வந்து பல வருஷங்கள் ஆண் டிருந்தும், ஔரங்கசீப் முதலான பல மதப்பித்தர்கள்கையில் அகப் பட்டிருந்தும், பஞ்சம் கொள்ளைநோய் முதலியவைகளால் அடிக்க

நிரப்பப்பட்டிருந்தும், இம்மதம் கெடுகோட்களாகப் பலத்திற் குறை மதத்தி இருந்துவந்திருக்கிறது. செல்வம், சேனுபலம் முதலியவை க்காம்ப இருப்பினும், இம்மதத்தைப் போன்ற வலிமை மகம்மது மதத்திற்குக் கிடையாது. ஐரோப்பாதேசத்திலிருந்து ஆயிரக்கண பங்கப் பாதிரிகள் வந்து கிறிஸ்தவமதத்தைப் போதித்து, கிறிஸ்தவ மதம் தைச் சேருவதனுல் துரைத்தனத்தார் வழியாக பலவித இலா பத்தினைக் காட்டிக் தினந்தினம் உழைத்துவரும்பொழுதே, நமது சிறிதும் அசைவதில்லையென்ருல் இம்மதத்தின் உயர்வைப் ச் சொல்லவும் வேண்டுமோ? நமது மதத்திற்குப் பலம் எது? மதங்களைப்பற்றி இழிவாய்ப் பேசாமலிருப்பதுதான். ஏனைய த்தோரெல்லோரும் தம் மதந்தானுயர்ந்தது. தம் மதத்தைச் தாருக்குத்தான் மோக்ஷம் கிடைக்கும் என்று சொல்லித் திரி ர்கள். நமது மதமோ எங்கும் பகவானிருக்கிருர். எல்லாம் ளால் உண்டானது. ஆகையால ஒன்றைப்பழித்து, ஒன்றை த்துவது பகவானுக்குச் சம்மதியாகாது என்று சொல்லுகிறது. தான் இந்து மதத்திற்கு மூலபலம்." இவ்விதம் பலதடவை ல்லி நமது மதத்தையும் நமது தேசத்தாரையும் பற்றிக் கூறி ரவப்படுத்தி வந்த மஹான் நமது நாட்டிற்கு 1897ஆு ம்பிவரும்போது அவரை நமது தேசத்தார் நிரம்பவும் கௌர தார்கள். ஒவ்வொருவூராரும் அவரை மிக்க அன்புடனழைத் ற்றுத் தம்மைத்தாமே பெருமைபடுத்திக்கொண்டனர்.

இவர் 1897ஆு ஜனவரிமாதத்தில், முதலில் கொழும்புவில் வந் கி அதுமுதல் கல்கத்தா வரையிலும் பல இடங்களில் பலவிஷ ங்களைப்பற்றிப் பிரசங்கஞ் செய்துகொண்டுபோனுர். சென்னை நான்கு பிரசங்கங்கள்செய்தார். பின்னர்க் கொஞ்சநாட்களுக்கு யமலையில் ஓர் ஆச்சிரமம் கட்டிக்கொண்டு அங்கிருந்தார். அப் ழுதே குமாயோன் என்னுமிடத்தில் சந்நியாசிகளுக்காகவே ஆச்சிரமங் கட்டுவித்து, அதற்கும தாமே தலைவராயிருந்தார். வருஷத்திற்கெல்லாம் அமெரிக்காவுக்குத் திரும்பிப்போய் அங் வேதாந்தசபையொன்று ஏற்படுத்தித் தம்முடன் கூடப் பரமஹம் க்குப் பணிவிடை செய்துகொண்டிருந்த பலரை ஆங்கு வர ழைத்து இந்து மதத்தைப்பற்றியும், வேதாந்தத்தைப்பற்றியும் சங்கம் செய்யும்படி ஏற்பாடு செய்தார். அவ்வேதாந்த சபையில் மெரிக்கர்களுக்குள் நிரம்பக் கற்றவர்கள் என்று பெயர் பெற்ற

வர் அங்கத்தினர். இவர் தாழ்ந்த ஜனங்களுக்குப் போதிக்க
போகவேயில்லை. எவ்விடத்திலும் உயரிய அறிவுடையார்க்ர்.
போதிக்கச் சென்றனர். அமெரிகாவிலிருந்து இங்கிலாந்து ஜர்மனு
முதலிய இடங்களுக்குச் சென்று, அங்கே மாக்ஸ்முலர், டாச்க
முதலிய பெரியோர்களைக்கண்டு, அவர்களே இவருடைய புத்திவ
மெச்சிக்கொள்ளும்படிப் பல பிரசங்கங்கள் செய்தார். ன்

1900வருஷத்தில் பாரிஸ் நகரத்தில் ஒருபெரும் காட்சிநடந்து
இவர் பாரிசுக்குச் சென்று பிரெஞ்சு பாஷையிலேயே யா ண்டை
வியக்கும்படி நமது மதத்தைப்பற்றிப் பிரசங்கித்தனர். பாரிசு தே
ந்து ரோம் தேசத்துக்கு இவர் அழைக்கப்பட்டார். கிறிஸ் மூ
அதிபதியாகிய போப் வசிக்கும் ரோமுக்குச் சென்று அங்கே மை
நமது மதத்தினுண்மையை வெளிப்படுத்தினர். சுவாமிகளுக் பிட்
சிறிது தேக அசௌக்கியமாகிவிடவே இந்தியாவுக்குத் திரும்பி அ
தார். பின்னர் தேகசவுக்கிய முற்றனர். இவரை ஜப்பான் தே னை
தாரனேகர்கள் தம் தேசத்துக்கு வரவேண்டுமென்று அழை டெ
னர். இவரும் அங்கு போவதாகவே எண்ணங்கொண் டிருந் பி
ஜூலைமாதம் நாலாந்தேதி சாயங்காலம் வெளியே போய்வி நா
வரவே தன்னுடனிருந்தவர்களை அழைத்துத் தாம் இனி உயிரு
ருப்பது அசாத்தியமென்று சொல்லி, இரண்டு மூன்று நாழிகை
ளுக்கெல்லாம் சமாதியடைந்தார்.

இவருக்கு வெகுபெயர்கள் சிஷ்யர்கள். ஆங்கிலேய அமெரிக
களுள்ளும் அநேகம்பெயர் சிஷ்யர்களிருக்கிறார்கள். இவரது சிஷ்
யாகிய நிவிதத்தா அம்மையும், அபயாநந்தா அம்மையும் நிரம்பக் க
வர்கள். அபயாநந்தா மூன்று மாதங்களுக்கு முன் சென்னை
வந்து, தான் விவேகாநந்தசுவாமிகளிடத்தில் வைத்துள்ள அன்
தனது பிரசங்க வாயிலாய்ப் பூர்த்தியாய்க் காண்பித்திருக்கிறார் ய
அபேதாநந்த சுவாமிகள் அமெரிக்காவில் பற்பல விடங்களுக் ம
சென்று, நமது மதத்தைப்பற்றிப் பிரசங்கஞ்செய்து ஒவ்வொரு மு
வையும் தவறாமல் விவேகாநந்தருடைய மகிமையை எடுத்து
சொல்லியிருக்கிறார்கள். இவர் அமெரிக்காவில் ஏற்படுத்தியிரு
கும் வேதாந்தசங்கம் நாளுக்குநாள் பலப்பட்டுக்கொண்டு வருகி
றது. நிவிதத்தா அம்மை ஏற்படுத்தின பெண்பாடசாலையும் வலுத்
துக்கொண்டு வருகிறது. இவர் தமது தேசத்தார்க்குச் செய்துள்ள
நன்மைகள் ஒருநாளும் மறக்கத்தக்கதல்ல.

கட்டளைக் கலித்துறை.

மகானென்றி யாரு மகீதலத் தின்கண் மகிழ்ந்துரைசீர்
மிகாநின்ற வள்ளல் கலைநலன் கூட்டுண்செவ் வேளனையா
னுகாநின்ற பைந்தே னிராச மலரி னொளிர்புயத்தான்
றகானென் றெவருங் குறைசொலற் கில்லாத் தகைமையனே. (6)

வேண்பா,

மைப்லொன் றின்றி மடலெழுதிப் பாநேரு
மையனே காவெனச்சொ லாநேருந்—துய்ய
மனத்தின் முகிழ்சிறந்து வாழ்த்துநரு மாவா
...ந்தின் மகளி ரெலாம். (7)

கட்டளைக் கலித்துறை.

...வகை மாதரு மெங்கள் புகழ்சான்ற வேட்வர்டிறை
...வரும் தோறும்யா மேற்கூறி யாங்குள் ளுருகிநிற்பச்
...ய மாமென வானந்த முற்றுத் திகழ்ந்துநின்றார்
...ராடு பொல்லாத மாக்களு மம்ம நயந்துளமே. (8)

வேண்பா.

...மொழியிற் பாகலஞ்சான் மேலோ ரெனையரோ
...மையொடன் னுனைப் பரிந்துரைத்தார்—தேன்மொழியாஞ்
...மிழின் யாமுமவன் சீர்மைசொலி மாலையொன்
...களிப் பிற்புனைந்திட் டோம். (9)

கட்டளைக் கலித்துறை.

...ன் றினங்கினர்க் குற்றநட் பாள னுளம்பிறிதாய்த்
...ன் றகன்று தருக்கினர்க் குற்ற தனியரியே
...ன் றெமதிறை வோனைப் புகழி னதனையொவ்வோம்
...மன் றிகழ்ந்திட்ட போர்க்குஞ் செய்தனன் பொன்னருளே.

வேண்பா.

...ன்னருளி னூற்றுப் புகழ்தோய் குணக்குன்று
...வயிர்ப்பைங் கூழ்வளர்க்கு மாவெழிலி—துன்னுமன்பின்

பொங்குகட னீதிப் பொலிவார் மணிவிளக்க
மெங்களிறை யெட்வர்டென் பேம். (11)

கட்டளைக் கலித்துறை.

என்பே சுவதேட்வர்ட் வள்ளல் குணங்களை யெம்முரையி
னின்பேர் வரையறைக் கட்படு மோவிதை யெய்த்திலமாற்
றுன்பே யுளங்கொ ளியல்புடை யாளருந் தூன்றிமகிழ்
நன்பே ருலக மிதுவே யெனவெணி நாடுவரே. (12)

வெண்பா.

நாடுதனிச் செந்தமிழி னற்கடலி லாடுவீர்
நீடுவகை கொண்டிங்ங னேர்மிறே—கூடிநா
மெல்லாரு மெட்வர் டிறைவன் முடிபூணதல்
சொல்லாரப் பாடிமகிழ் தும்.

கட்டளைக் கலித்துறை.

தும்மினுங் குற்ற மிருமினுங் குற்றஞ் சொலிப்புடைத்தார்
நம்மிந் தியரைமுன் னாளு நலம்பெற்ற ஞாலமன்ன
ரிம்மையின் பெல்லா மினிது நுகர்தந் திருங்களியா
டெம்மை நிகர்ப்பவர் யார்கொலிப் போழ்தென் றிருக்குதுமே

வெண்பா

இருக்குமறை தான்முழங்கு மிந்தியநற் றேயத்
தருக்குமற் றையாங்கிலர்க்குஞ் சாலப்—பெருக்கு
முரிமைகளில் வேறுபா டொன்றுமுறு வண்ணம்
புரியுமெட்வர்ட் மன்னன் புகன்று.

கட்டளைக் கலித்துறை.

முன்னர்தம் மன்னென் றுவையமெல் லாமொப்ப வந்தவெங்கண்
முன்னவ னாமெட்வர் டேழாவ னோனு முதலனென்னப்
பொன்னரி யாதன மேறி மகிழ்ந்து பொலிந்தனனு
னன்னரிக் காட்சிகண் டானந்த மெய்தின நாமுளத்தே.

வெண்பா.

தேவன் றிருவருளாற் சீர்சான்ற வேட்வர்டெங்
காவலன்செங் கோல்கொண்டான் காண்மினோ—யாவிரு
முள்ளுவந்து வாழ்த்துமி னோங்கியகூத் தாடுமின்
றெள்ளுதமிழ்ப் பாடுமின் றேர்ந்து. (17).

கட்டளைக் கலித்துறை.

தேர்ந்துநின் றீருஞ் சிறிதள வேனுந் தேரவிருஞ்
சேர்ந்துநின் றிவ்வயி னீர்தினஞ் சிந்தை செயுமொருவ
னார்ந்துநின் றோங்கும் பரம்பொரு ளாகு மவனையன்பு
கூர்ந்துநின் றேட்வர்ட் பொருட்டுக் கரந்தொழல் கொள்பரிசே (18)

வெண்பா.

சேம சுபகிருதிற் செங்கடகச் சித்திரையிற்
காமர் முடியணிந்தான் காண்மினோ—சீமைக்
கரசனெனு மேட்வர் டருஞ்சார்வ பௌமப்
பரசுபெரும் பேரொடுமிப் பார். (19)

கட்டளைக் கலித்துறை.

பாரி லவனர சென்றென்றும் வாழ்க பயன்சிறக்க
சேரலர் யாவரு நட்பாள ராக செறிந்துமுகின்
மாரி பொழிகவெங் கெங்குந் தமிழின் மணங்கமழ்க
வேரிற் பொலிகநமிந்தியர் வாழிய வென்சொலுமே. (20)

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி.

வேதாந்தஸாரம்.

ஆஸேது ஹிமாசலாந்தமான இப்பரதகண்டத்தில், பூர்வத்தில் ஆரியர்கள் ஸவதந்திரமும் ஐஸ்வரியமும் பெற்று, பலவாற்றாலும் பெருமையடைந்து, பலதுறைகளிலும் தத்வவிசாரணைகளைச் செய்து, அவ்விசாரணைகளால் ஏற்பட்ட சித்தாந்தங்களை கிரந்தரூபமான சாஸ்திரங்களால் நிலை நிறுத்திப் போந்தகாலத்தில் உண்டான மதங்களில், வேதாந்தமென்று வழங்குகிற மதமொன்றுமே மற்றவைகளைப்போலாது, சிறப்புற்றோங்கி வளர்ந்து, இத்தேசத்தாராலும் இன்னும் மற்றஅயல்தேசத்தவர்களாலும் நன்குபாராட்டி ஆதரிக்கப்பட்டு இன்றைக்கு மனுஷ்டிக்கப்பட்டு வருகின்றதென்பது யாவருக்குந் தெரிந்தவிஷயம். இதற்கு சற்றேறக்குறைய சமான காலிகமான மதங்களில், பௌத்தமதம் மகததேசத்து அரசர்களாலும் மற்று வேறுசில அரசர்களாலும் ஆதரிக்கப்பட்ட வரையில், இப்பரதகண்டத்தில் தலையெடுத்து நின்று, பிறகு இவ்விடத்தில் மறைந்து, சீனம் முதலிய வேறு தேசங்களிற் போய்ப் பரவியது. ஜைநமதமோ இத்தேசத்திலேயே பரவமுடியாமல் சிற்சில இடங்களில் மாத்திரம் இருக்கிறவிடந் தெரியாமலொளித்திருப்பதுபோலிருக்கின்றது.

சற்றேறக்குறைய வைதிக சம்மதம் பெற்று, ஷட்தர்சநங்களென்று பிரஸித்தம் பெற்ற அவ்வாறு மதங்களில், வேதாந்தமென்று வழங்குகிற ஸ்ரீபாதராயண வியாசர் மதம் தவிர, மற்ற நியாய வைஸேஷிகாதி மதங்களோ, தத்தம்வைதிகாம்சங்களை வேதாந்தத்திற்கு ஸமர்ப்பிவித்துவிட்டு, தங்களை அநுஷ்டிப்பவர்களின்றி புஸ்தகரூபங்களாய் மட்டுமிருக்கின்றன. ஆதலால் இப்போது இந்துக்களென்று சொல்லப்படுகிற ஆரியர்களுக்கு வேதாந்தமே அநுஷ்டானத்திலிருக்கிறமதம். வைஷ்ணவம், சைவம், சாக்தம், பாசுபதம் என்றுவழங்குகிறவைகள் வேதாந்தத்திற்கு விரோதிகளான மதபேதங்களல்ல. வேதாந்த தத்வ சாஸ்திரத்தினுடைய துணிபுகளையே அவைகள் தேவதாநாமரூபகுணபேதங்களாலும், சரியை கிரியையாதி அநுஷ்டான பேதங்களாலும், சாதாரண ஜனங்களுடை

சிற்றறிவுக்கேற்ப வியவஹரிக்கின்றன. இதுவிஷயம் அந்தந்த மதத்திலுள்ள பெரியோர்களுக்கு நன்றாய்த் தெரியும். அந்த மதக்கிரந்தங்களையெல்லாம் அபிமானத்தை விட்டு படித்துக்கேட்டு ஆராய்கிறவர்களுக்கும் நன்குபுலப்படும். இன்னும் வேதாந்த சாஸ்திரத்திற்கு மூன்றுகால் போன்று, பிரஸ்தானத்திரயம் என்று வழங்குகிற, உபனிஷத்து, பிரம்ஹசூத்திரம், பகவத்கீதை, இவைகள் இம்மதங்கள் ஒன்றைவிட்டொன்றை அபிமானியாமல் அவைகளுக்கெல்லாம் பொதுவாய் ஸமரஸமாயிருக்கின்றன. பிரம்ஹசூத்திரத்தில் சைவமென்றும், வைஷ்ணவமென்றும் இன்னும் மற்ற வியவஹாரங்களொன்றுமில்லை. இம்மதங்களடங்கிய புராணங்களையும் ஆகமங்களையும் வியர்ஸபகவான் சற்றேறக்குறைய ஸமமானவைகளாகவும், வைதிகமதத்திற்கு ஏறக்குறைய அவிரோதமானவைகளாகவும் தாமே ஒப்புக்கொண்டிருக்கிறூர் என்பது லோகவிதிதமன்றி தாமே மஹாபாரதத்திலும் சொல்லியிருக்கின்றூர். ஆதலால் இம்மதஸ்தர்களில் அநேகர் துரபிமானிகளாய் விஷயந்தெரியாமல் ஒருவரையொருவர் தூஷிப்பதும், த்வேஷங்கொள்வதும், சம்பிரதாய பேதத்திற்காக சிநேகசஹபோஜனஸல்லாபாதிகளை விட்டிருப்பதும் கலியின் கொடுமையேயொழிய சாஸ்திரசம்மதமன்று. பெரியோர்கள் சம்மதமுமன்று. இக்குற்றங்களை நீக்கி, கலானுகுணமாயும், பூர்வீக பெரியோர்களாலேற்பட்ட சாஸ்த்ரானுகுணமாயும், தக்களனுஷ்டானங்களையும், தேசாசாரங்களையும் சீர்திருத்தி எப்போது நம்தேசத்தவர்கள் ஒன்றுபட்டு, ஒருவரையொருவர் விரோதிக்காமல் அபிமானித்திருப்பார்களோ, அப்போதுதான் இத்தேசத்திற்கு நன்மைகாணலாமென்பது நிச்சயம். ஆனால் இம்மதஸ்தாபகர்கள் ஒருவரையொருவர் கண்டித்தும், சிற்சில இடங்களில் தூஷித்தும் எழுதுவானேனென்றூல் அதற்குக்காரணமுண்டு. சித்தாந்தக்கொள்கைகளில், ஒருவரையொருவர் யுக்திமூலமாயும், சாஸ்திர மூலமாயும் கண்டிப்பது தத்வநிச்சயம்பண்ணுவதற்கு சாதகமேயொழிய பாதகமில்லை. அதனால் தோஷமுமில்லை, அபிப்பிராயபேதத்திற்காக ஜாதிபேதங்காட்டி விரோதமுண்டாக்கி, ஐகபத்தியமில்லாமல் கலகிக்கச்செய்யவேண்யதில்லை. சித்தாந்தக்காரர்கள் சிற்சில இடங்களில் இதரஸித்தாந்த நிந்தை பண்ணுவது அனுவசியமானாலும் அப்படி செய்திருப்பது உண் [illegible]வதற்கு நம்பெரியோர்கள் நியமித்திருக்கிறபடி தாத்பரியம் [illegible]ண்டால் அசுயா த்வேஷாதிகளுக்கு இடமில்லை. பெரியோர்

கள் சாஸ்திரங்களில் நஹிநிந்தாநியாயம் என்று ஒரு நியாயம் விதித்திருக்கிறார்கள். அதற்குதாத்பரியம் பிரமாணிக்கசாஸ்திரங்கள் ஒன்றையொன்று நிந்தித்தால் அதற்கு இதரநிந்தைபண்ணினதாக அர்த்தங்கொள்ளக்கூடாது. அந்த நிந்தையை ஸ்வபிரஸம்ஸாபரமாக எடுத்துகொள்வது உசிதமென்றுவிதிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிந்தைகள் வேதசாஸ்திரங்களிலும்உண்டு. அப்படியே அறிந்தோர்கள் பிராமாணிக்ககிரந்தங்களிலுள்ள மதபேதங்களைப்பற்றி பரஸ்பரநிந்தைகண்டால் மேற்சொன்ன நியாயானுகுணமாக அர்த்தங்கொண்டு, ஒருவரையொருவர் க்ஷமித்து, ஐகபத்தியவிரோதமின்றி நடப்பது உசிதமென்று தோற்றுகிறது. இத்தன்மையான நிந்தைகளும், தேவதானுஷ்டான நாமபேதங்களும் தவிர முக்கியமான சிலசித்தாந்த விஷயங்களில் பரஸ்பரவிரோதங்கள் அதிகமாக இல்லை யென்பது சற்றுக்கவனித்து படித்தவர்களுக்கு நன்கு புலப்படும். இம்மதங்களுக்குள், எல்லாவற்றிலும் ஸ்வரூபம் வேதாந்தமதம்; ரூபங்களிவைகள். வேதாந்தமதத்தை மதங்களுக்கு உயிரென்றும், இவைகளை அதற்கு வெவ்வேறு மாதிரியான தேகங்களென்று சொல்லினும் பொருந்தும். ஆதலால் நம்மவர்களில் ஒவ்வொருவரும் வைஷ்ணவனானாலும், சைவனானாலும், வேதாந்தமதத்தை ஸ்வமதமாகவும், வைஷ்ணவாதி மதங்களை வேதாந்தானுஷ்டானோபயுக்தமான உபாதிமதங்களாகவும் கொண்டு, அதை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து அதற்குத் தக்கபடி தன்நடத்தைகளையும் மற்றவர்களுடைய நடத்தைகளையும் சீர்திருத்த முயலவேண்டுமென்பது ஆவசியகமென்று விளங்குகிறது.

இதுவுமன்றி தற்காலத்தில் இந்த ஹிந்து மதமாகிற வேதாந்த மதத்திற்கு அநேக இடையூறுகள் நேர்ந்திருக்கின்றன. பாதிரிமார்கள் வெகுதிரவியங்களை விரயஞ்செய்து தன்மதம் தெரியாத பாலர்களுக்கு இங்கிலீஷ்பாஷையுடன் கிறிஸ்தவமதத்தைப் போதித்து ஹிந்துமதத்தைவிட்டு கிறிஸ்தவமதத்தை ஏற்றுக்கொள்ளச்செய்கிற பிரயத்தினங்கள் சொல்லிமுடியாது. அவர்கள் போதனைகளைக் கேட்டு, ஸ்வமதஸ்வரூபமும் சைவவைஷ்ணவங்களுடைய தாத்பரியமும் அறியாமல், மதிமயங்கி அநேகர்கள் கிறிஸ்தவர்களாய் விடுகிறார்கள். இதுதவிர, வேதாந்தமதம் ஒரு சாமாந்ய மதமாத்திரமல் அது ஒருத்தத்வ சாஸ்திரமும் (Philosply) அதினடிய

பிறந்தொருமதமும் (Religion) கூடியது. ஆதலாலதற்கு தத்வசாஸ்திரஸம்பந்தமற்று, கேவலம் பக்தி பிரதானியமான கிறிஸ்தவமதத்தால் வருகிற அபாயம் ஒரு பெரிதல்ல. ஐரோப்பிய சாஸ்திரங்களை ஸ்வயுக்தியின்றி கேவலம் வாசா மாத்திரங்களால் கற்று, அதிலுள்ள பூகோள, ககோள, கணித, பூத, பௌதிக சாஸ்திரங்களின் பெருமையைப் பார்த்து, மோஹிப்பதனால் வருகிற இடையூறு அதிலும் பதின்மடங்கென்று சொல்லவேண்டும். சுமார் இருநூறு முன்னூறு வருஷகாலங்களாக ஐரோப்பியர்கள் பிராகிருதிக சாஸ்திரங்களில் Sceinces) நம்முன்னோர்களைக் காட்டிலும் மிகத் தேர்ச்சி யடைந்து, நம்முன்னோர்களுக்குத்தெரியாத அநேக விஷயங்களையும், இயந்திரங்களையும் கண்டுபிடித்து, லோகோபகார விஷயங்களுக்கு அவைகளைப் பிரயோகித்து, மிகவும் பெருமையை யடைந்திருக்கிறார்கள் என்பது லோகமுழுதும் பிரசித்தியான விஷயம். அதினால்பிரமித்து,ஐரோப்பாக்கண்டத்தில் பிரசித்தியடைந்த, பெர்கலி, ஹ்யூம், மில், பெயின், ஸ்பென்ஸர், முதலிய ஆங்கிலத் தத்வசாஸ்திரிகளும், காண்ட், ஹேகல் முதலிய ஜெர்மனிய தத்வசாஸ்திரிகளும் கேவல ஸ்வயுக்திகளால் சொல்லும் அபிப்பிராயங்களை சரியென்று நம்பி, ஸ்வமதமாகிற வேதாந்த சாஸ்திரத்தில் நம்பிக்கையிழந்து, ஐரோப்பியர்களுடைய லௌகிகாசாரங்களையும், மதாசாரங்களையும் மேற்கொள்ள விரும்பினவர்களும், விரும்புகிறவர்களும், இங்கிலீஷ் படித்து, பி. ஏ. எம். ஏ. முதலிய பட்டம் பெற்றவர்களில் அநேகருண்டு. இக்காரணங்களைக்கொண்டு நம் தேயத்து பாலர்களுக்கு, முக்கியமாக வேதாந்த சாஸ்திரத்தினுடைய கொள்கைகளையும், சைவ வைஷ்ணவ முதலிய சம்பிரதாயங்களுக்கும் வேதாந்தமதத்திற்குமுள்ள சம்பந்தங்களையும், இதற்கும் மற்ற வேறு மதங்களுக்கும், ஐரோப்பிய தத்வ சாஸ்திரிகளுடைய அபிப்பிராயங்களுக்குமுள்ள வேறுபாடுகளையுமெடுத்துக்காட்டவேண்டியது அவசியமென்று தோன்றுகிறபடியால் இவ்வியாஸம் எழுதப்படுகிறது. வேதாந்த மதத்திற்கு வேதத்தினுடைய அந்தியபாகமாகிற உபநிஷத்என்பது முதல்நூல். அதினடியாகப் பிறந்ததற்கு இந்த வேதாந்த தத்வசாஸ்திரமென்று பெயர். உபநிஷத்துக்களில் இச்சாஸ்திரத்தின கொள்கைகள் ஆதுபூர்வியாய், நியாயதுகிரதிதர்க்கங்களோடு வியவஹரிக்கப்படவில்லை.

அங்கங்கே வெவ்வேறு தத்வங்கள் வெவ்வேறிடங்களில் சம்பந்த நியமமன்றி வெவ்வேறு ரிஷிகளால் வெளியிடப்பட்டிருக்கின்றன. 'ஆபாத பிரதீதி'க்கு சில இடங்களில் அர்த்தசந்தேஹங்களும் பூர்வாபரவிருத்தங்களும் தோற்றும். ஆதலால் உபநிஷதர்த்தங்களை ஸமந்வயம்பண்ணி, பூர்வாபரவிரோத மின்றி சரிப்படுத்துவது கடினம். ஆதலால் அக்காலத்துப் பெரியோர்கள் இந்த உபநிஷதர்த்தங்களை இதிஹாஸங்களிலும் புராணங்களிலும் அநேக இடங்களில் வியவஹரித்து உபபிரம்ஹணம்பண்ணி யிருக்கிறார்கள். இது தவிர உபநிஷத் தத்வார்த்தங்களை ஆநுபூர்வியாய் தெரியப்படுத்தும்படியாக, வேதவியாசர் பிரஹ்மசூத்திரமென்று ஒரு நூலைச் செய்திருக்கிறார். இதுவும் உபநிஷத்துக்களும், பகவத்கீதையும் தான் வேதாந்த சாஸ்திரத்திற்கு முக்கிய நூல்கள். இவைகளைக் கொண்டே வேதாந்த சாஸ்திரம் முதலில் பிரவர்த்தித்தது. இவைகளுக்கு ரிஷிகள் காலத்திலேயே ஜயமுனி, டங்கர், திரமிடாசாரியர் முதலியோரால் வியாக்கியானங்களும் ஏற்பட்டிருந்ததாகச் சில கிரந்தங்களால் தெரிய வருகிறது. அவைகளெல்லாம் இப்போது லுப்தமாய்ப் போய்விட்டன. இவைகளுக்கு வியாக்கியானமின்றி அர்த்தமாகிறது கஷ்டமானதாலும், அப்பூர்வீக வியாக்கியாதாக்களுடைய அபிப்பிராயங்களாவது, கிரந்தகர்த்தாக்களுடைய தாத்பரியங்களாவது நமக்கு இன்னவென்று சந்தேகமன்றி அறியமுடியாது. ஆனால் ரிஷிகள் காலத்திற்குப்பிறகு ஆசாரியர்களால் இவைகளுக்கு வியாக்கியானங்கள்ஏற்பட்டு, வேதாந்த சித்தாந்தங்கள் பண்ணப்பட்டுமிருக்கின்றன. அவைகளில் முக்கியமானவைகள் ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகளாலும், ஸ்ரீராமாநுஜாசாரிய ஸ்வாமிகளாலும், ஸ்ரீமத்வாசாரிய ஸ்வாமிகளாலும் ஏற்பட்டவைகள். அவைகள் முக்கியமான தத்வ விஷயங்களில் ஆசாரியர்களுடைய அபிப்பிராய பேதங்களால், வேறுப்பட்டிருக்கிறபடியால், அவைகள் வேதாந்தமதத்திற்கு மூன்று சித்தாந்த பேதங்கள் என்று சொல்லப்படும். அவைகளை அத்வைத மென்றும், விசிஷ்டாத்வைத மென்றும், த்வைத மென்றும் வியவகரிப்பது வழக்கம். அவைகளில் அத்வைத மென்கிற ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகளுடைய மதம் முதலிலுண்டானது. அதற்கு பிற்பாடு ஸ்ரீராமாநுஜாசாரியருடைய மதமும், பிறகு மத்வாசாரிய ஸ்வாமிகளுடைய மதமும் உண்டாயிற்று. ஆதலால் முதலில்

ஸ்ரீசங்கராசாரியருடைய மதத்தைப்பற்றி வியவகரிப்பது நியாயமான படியால், அதைப்பற்றி விவரமாக எடுத்து எழுதுவோம்.

நா. ராமானுஜாசாரியர்.

ஆர்ய தர்ம சாஸ்திரத்தின்படி

விவாகம் ஐச்சிகமா? அல்லவா?

உலகத்தில் ஒவ்வொன்றும் சரியாய் நடந்துகொண்டு வருவதற்குக் காரணம், ஒவ்வொரு விஷயத்துக்கும் விதியேற்பட்டிருப்பதே. எவ்விஷயத்துக்கும் விதியில்லாமல் போனால், அது சரியாய் நடவாது. ஒவ்வொருவனும் தன்தன்இஷ்டப்படி காரியத்தை நடத்திக்கொள்வதென்றால் உலகமே கெட்டுப்போய்விடும். அவனுக்கு இஷ்டப்பட்டதை செய்யலாமென்று சொல்லிவிட்டால், ஒருவன் தன் அடுத்த வீட்டுக்காரனை அடிப்பான். மற்றொருவன் பிறர் சொத்தை அபகரிப்பான். வேறொருவன் தன்னைவிட பலத்தில் குறைந்தவர்களை வதைப்பான். உலகமே சின்னா பின்னமாய்ப் போய்விடும். அதற்கு; அந்தந்த காலங்களிலிருந்தரிஷிகள், காலானுகுணமாக ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் விதிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவ்விதம் ஏற்பட்ட விதிகளை எல்லோரும் அனுஷ்டிக்கவேண்டியது. அவ்விதிகளின்படி ஒருவன் நடக்காவிட்டால் அவனுக்குத் தண்டனை ஏற்பட்டிருக்கிறது. அப்படிக் காலானுகுணமாய் ஏற்பட்ட விதிகள் உயர்ந்ததாயிருந்தாலும் சிலசமயங்களில் ஜனங்களுடைய துஷ்ட சுபாவத்தினாலே அனுஷ்டிக்கப்படாமல் போகிறதுமுண்டு. இப்படியே தனித்தனி அநேகம் இதிஹாச புராணங்களில் இந்த விதிகள் அடங்கி இருக்கின்றன. தர்ம சாஸ்திரங்களில்முக்கியமானவை, மனுதர்மசாஸ்திரம், விஷ்ணுஸ்மிருதி, ஆபஸ்தம்ப தர்மசூத்திரம், யாக்ஞவல்கிய ஸ்மிருதி, வஸிஷ்டஸ்மிருதி முதலானவை. புராணங்களில் முக்கியமானவை, ஸ்ரீபாகவதம், அக்னி புராணம், சிவபுராணம், பத்மபுராணாதிகள்; ராமாயணம், மஹாபாரதம் இவ்விரண்டும் இதிகாஸங்கள். இவைகளிலும், வேதம் உபநிஷதம் முதலியவைகளிலும், நிரம்ப தர்மத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றன. மஹாபாரதத்தில் அநேகவிடங்களில் சகல தர்மங்களைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கின்றது. புத்திமான், முட்டாள், தனவந்தன், ஏழை, முதலிய எல்லோரும், விவாகமென்பது இன்னதென்று அறிந்துகொள்ளவேண்டியது. தாழ்ந்த பிராணிகளுக்கு விவாகம் கிடையாது. மனிதனே விவாகத்தை காமார்த்தமட்டு

மல்ல, என்பதை யறிந்து நடந்துகொள்ளவேண்டியது. விவாகத்தைக் குறித்து ஆரிய தர்ம சாஸ்திரமென்ன வென்றறிந்துகொள்ள வேண்டியது. ஒவ்வொருவரும் விவாகஞ்செய்துகொள்ளவேண்டியது அவசியம் தானா? விவாகம் செய்துகொண்டவர்கள், செய்துகொள்ளாதவர்கள், இவர்களுடைய பரகதி என்னென்ன? புருஷனும், ஸ்திரீயும் தங்கள் தங்களுடைய மனைவியாவது, பர்த்தாவாவது இறந்த பின் மறுவிவாகம் செய்துகொள்ளலாமா? மனைவியும், பர்த்தாவும் பரஸ்பரம் எப்படி நடந்துகொள்ளவேண்டும்? இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்லக் கூடியது எது? தர்ம சாஸ்திரம் தான்.

"ஆனால் ஆரிய தர்மசாஸ்திரத்தைப் போய் நாம் ஏன் பார்க்க வேண்டும்? தற்காலத்தில் நடப்பதைப் பார்த்தால் போராதோ? ஏட்டுச் சுரைக்காய் கறிக்காகுமோ? எது எது நடக்கிறதோ அதன்படித்தானே நாமும் நடந்துகொள்ளவேண்டும், உலகத்தோடொத்துவாழ் என்ற பழமொழியைக் கேள்விப்பட்டதில்லையோ." மேலே சொலலியபடி சிலர் சொல்லக்கூடும். இப்பொழுது நடப்பது ஆதி தர்மசாஸதிரங்களையொட்டி நடக்கவில்லை. இப்பொழுது நடந்துவரும் வழக்கத்தில் அநேகம் கெடுதிகள் அடங்கியிருக்கின்றன என்பது எல்லாருக்கும் தெரியும். மனுமுதலாகிய பெரியவர்கள் எழுதிவைத்த தர்மசாஸ்திரங்களைப் பார்த்து அதன்படி நாம் நடந்துகொண்டோமானால் இககெடுதிகளை நிவர்த்தித்துக்கொள்ளலாம்.

முதலில் விவாகம் ஐச்சிகமா அல்லவா என்பதை விசாரிப்போம. இப்பொழுது நடக்கிறபடி புருஷர்களுக்கு விவாகம் ஐச்சிகம் தான். பெண்களுக்கோ, கல்யாணம் எப்படியும் நடந்துவிட வேண்டும. உயர்ந்த ஜாதிப்பெண்ணா யிருந்தால் 8 வயதிற்குள்ளேயே கல்யாணம் ஆகவேண்டும். தாழ்ந்த ஜாதியார் பெண்களுக்கு 20 வயதிற்குள் கல்யாணம் ஆய்விடவேண்டும். மேலும், தானகப் பார்த்து கல்யாணம் செய்துகொள்வதற்கு அதிகாரம் அவர்களுக்கிடையாது. இதுசரிதானா வென்பதை விசாரிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. இப்பொழுது நடக்கிறபடி, விவாகம் செய்துகொள்ளுகிறவர்களைக் கேளாமல், விவாகம் செய்விப்பது சாஸ்திர சம்மதமா? இப்பொழுது நடக்கிறபடி மிகவும் இளவயதிலேயே

விவாகத்தை நடத்தலாமா? சாஸ்திரப்படி கூடாதுதான். நியாயாதிபதிகளுக்குக்குள் அநேக வரிசைகளுண்டு. ஐகோர்ட்டு ஜட்ச் என்றும், சப்ஜட்ச் என்றும், கிராம முன்சீப் என்றும் அழைக்கப்படும் எல்லோரும் நியாயாதிபதிகளே; ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றி சம்வாதம் வரும்பொழுது, ஐகோர்ட் ஜட்ச் அபிப்பிராயத்துக்கு மேலாக சப்ஜட்ச் அபிப்பிராயத்தைக் கொள்ளலாமா? சப்ஜட்ச் அபிப்பிராயத்துக்கு மேலாக கிராம முன்சீப் அபிப்பிராயம் ஆகுமா? அதுமாதிரியே தர்ம சாஸ்திரங்களில் உயர்ந்தது பழைய காலத்து மனு, பராசராதி தர்மசாஸ்திரங்கள், அவையெல்லாம் உற்றுப்பார்த்தால் விவாகம் ஐச்சிகம் என்றே தெரியவருகிறது. பாகவததில் உத்தானுபாதரது தங்கையாகிய தேவஹூதி என்பவள், தனக்கு ஒத்தகுணம் புத்தியுள்ள புருஷனைத் தேடும்போது, அப்பெயர்ப்பட்டவர் ஒருவர் கர்த்தவ பிரஜாபதி அகப்பட்டதாகவும், அப்பொழுது அவரைக் கல்யாணம் செய்துகொள்ள இச்சைகொண்டதாகவும் சொல்லியிருக்கிறது. அவள் இஷ்டங் கொண்டதன் பேரில் அவள் தகப்பனர் கர்த்தவ பிரஜாபதியைப்பார்த்து, அவளுடைய அபிப்பிராயத்தை வெளியிடுகிறார். இதனல் தெரிவது என்னவென்றால், இப்பொழுதுபோல பெண்கள் முழுமூடர்களாயிருக்கவில்லையென்றும், கல்யாணத்திற்குப் பிரதானமாய் அவர்களுடைய சம்மதி வேண்டுமென்றும் தெரியவருகிறது. தாரணியும் அவள் தங்கையும் பிரம வாதிகளாய்க் கல்யாணம் வேண்டாமென்று சொல்லி, சும்மா இருந்து விட்டார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

புருஷனுக்காவது, ஸ்திரீக்காவது விவாகம் ஐச்சிகம் என்பதற்கு மேற்கோள்.

1. ருக்வேதம், 10-85-9-37.
2. சண்டோகிய உபநிஷத்து, பக்கம் 137, (சங்கரபாஷியம்).
3. அதர்வவேதம், 14-1, பக்கங்கள் 302-303.
4. ஆபஸ்தம்ப தர்ம சூத்திரம், 1-1-4, பக்கம 29.
5. ,, பாஷியம், பக்கம் 10, பம்பாய் பதிப்பு.
6. ஹிர்ணயகேசி சூத்திரம், 4-பக்கம் 3.
7. மனு, 2-4; 2-243, 244, 249; 5-56; 9-89, 90, வியாக்கியானங்கள்.

8. மேதாதிதி.
9. சர்வக்ஞ நாராயணர்.
10. குல்லூகர்.
11. இராமசந்திரர்.

12. விஷ்ணு. 28-42 முதல் 47; கல்கத்தா பதிப்பு, பக்கம் 113
13. யாக்ஞவல்கியர், 1-49, 50, 51, (பம்பாய்பதிப்பு).
14. வஸிஷ்டர், 7-3 முதல், 5 வரையில்.

(கல்கத்தா பதிப்பு பக்கம் 470).

15.	தட்சகன், 1-7, 8.	ஷை	(383)
16.	சம்வர்த்தர் வால்யூம் 34;	ஷை	(587)
17.	உஷாநசன், 3-40-முதல் 42-வரையில்	ஷை	(517)
18.	வியாசன், அத்தியாயம் 1;	ஷை	(324)
19.	கௌதமன், 3;		(406)

20. நாரதன், 12-22, 24, 25, 26.

மஹாபாரதம்.

21. ஆதிபர்வம், அத்தியாயம் 82-83, (பம்பாய் பதிப்பு).
22. வனம். அத்தியாயம் 293-27 முதல் 32-வரை (பம்பாய் பதிப்பு).
23. அநுசாஸன ஷை 75-34-முதல் 37-வரை ஷை
24. உத்தியோக, ஷை 120-5, 6; 173 முதல் 177 வரை ஷை
25. சல்லிய, ஷை 52; ஷை
26. சாந்தி, ஷை 324-25-முதல் 27; 326-20, நீலகண்டருடைய நிகண்டுடன் ஷை

27. ஸ்ரீ பாகவதம், 3-21-27; 3-22-9; 4 1-6, 63; 4-8-1; 6-6-7; 7-12-14; (வீரராகவ); 11-17-30, 37. (ஸ்ரீதரனும் வீரராகவனும்).
28. விஷ்ணு புராணம், 1-10-17-18 (ஸ்ரீதரன்); 3-10-13 முதல் 15; (விஷ்ணுசைத்தியரர்-ஸ்ரீதரர்).
29. மார்க்கண்டேய புராணம், 28-15 முதல், 18; 125 126-127; 128-4.
30. சிவபுராணம், ஞானகாண்டம், 17-44 முதல் 46;

31. அக்கினிபுராணம், 1؛3-17.
32. கூர்மபுராணம், 3-3.
33. தேவி பாகவதம், 3-18-46; 5–17-8-முதல் 30.
34. மாதவீயம், (தெலுங்கு) ப. 205, உதாரணங்களுடன்.
35. விஜயத்துவஜ பாகவதம், வியாக்கியானம், 10-903.
36. கிருஷ்ணாசார்ய ஸ்மிருதி, ப. 39.
37. நாராயணபட்டரின் பிரயோக ரத்தினம், பக்கம் 12.
38 இதிஹாசகோஷம், பக்கம் 513.
39. பிரஹதாரண்ணியனுடைய சங்கரபாஷியம், பக்கம் 154.

மேலும் விவாகம் செய்துகொண்டவர்களைவிட விவாகம்செய்துகொள்ளாதவர்களுக்கு உயர்ந்த லோகமுண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது.

1. மனு, 2-243, 244, 249; 8-363.
2. விஷ்ணு, 28-47, ப. 113, ° (கல்கத்தா பதிப்பு).
3. யாக்ஞவல்கியர், அத்தியாயம், 1-50, பக்கம் 414 ,,
4. ஸ்ரீ பாகவதம், 2-6-18.

விவாகமே செய்துகொள்ளாதவர்கள் பிர்ம்ம ஞானிகளாய் அநேகர் இருந்திருக்கிறார்கள்.

புருஷர்கள்.

1. நாராயணர்.
2. சனகர்.
3. சனந்தனர்.
4. சனத்சுஜாதியர்.
5. சனத்குமாரர்.
6. நாரதர்.
7. கவி.
8. மஹாவீரர்
9. சவனர்.
10–முதல் 18-வரையில்9 ஜாயந்தயர்கள்.
19. பிரஷத்தரர்.
20. கவி.
21. பீஷ்மர்.

(1–21:) ஸ்ரீபாகவதம், விஷ்ணுபுராணம, மார்கண்டேய புராணம்.

பெண்கள்.

1. கார்கி, மஹாபாரதம், சாந்திபர்வம் அத்தியாயம் 320 321. பம்பாய் பதிப்பு.

2. வயுனி } பாகவதம் விஷ்ணு புராணம், மார்கண்டேய
3. தாரிணி } புராணங்களில்.
4. கார்கி, வாசக்னிவி, }
5. பாடலி, பிராசிதை, } இதிஹாசகோஷம் பக்கம் (518.)
6. சுலுப்பை, மித்திரை. }

ஆகையால் விவாகம் ஐச்சிகமே யென்று நாம் கொள்ளவேண்டியிருக்கிறது.

ரு. இரகுநாதராவ்.

சூதவ்ருக்ஷம்.

அத்தியாயம். 1.

எதிர்பார்க்கப்படாத ஒருகடிதம்.

இதனைவாசிக்கும் எமது நேசர்காள்!

எவ்வளவு நாட்களாக நான் நமது தேசத்து ஜனசமூக சீர்திருத்தத்திற்காக உழைத்திருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம். நான் உழைத்ததற்குத்தக்க பயனொன்றும் கிடைக்கவில்லையென்று உங்களுக்கே தெரியும். ஆயினும், மெல்லமெல்ல வளர்ந்துவரு மதுதான் அநேக நாட்களுக்கு நீடித்து நிற்கும். பளீரென மின்னும் மின்னல் ஒருவிநாடிப்பொழுதிற் கெல்லாம் மறைந்துபோவதை நீங்கள் பார்த்திருக்கலாமே. ஆகையால் நமக்குச்சரசரவென் றாகவேண்டுமென்பது ஆனாவசியம். அதுநிற்க. இன்றுகாலை எனக்கு ஒருகடிதம் கிடைத்தது. அது நான் சற்றேனும் எதிர்பார்த்திராதது. அக்கடிதத்துடன் ஒருகனமான கடுதாசிக்கட்டும் இருந்தது. தபால் முத்திரையைப் பார்த்தேன். அது எவ்வூரிலிருந்து வந்ததென்று தெரியக்கூடவில்லை. உடனே கடிதத்தைப் பிரித்துப் பார்த்தேன். அதை முழுவதும் இரண்டுமுறை வாசித்தேன். பின்னர் அத்துடன்வந்த கடுதாசிக் கட்டின்மேலிருந்த துணிமுதலியவற்றைப் பிரித்தேன். உள்ளேசிறிதுசிறிது வாசித்தேன். அப்புறம் எனக்கு வேறு அவசியமானகாரியங்களிருந்தும் அக்கடிதத்திற் சொல்லியவாறு உடனே அதைஅச்சிடும்படி அச்சியந்திரசாலைக்கனுப்பினேன். ஐயன்மீர்! இதனால் யாருக்கேனும் பயனுளதோ வின்றோவென்று நீங்களேதான் யோசித்துப்பார்க்க வேண்டும். எனது சிறிய அறிவிற்கெட்டியமட்டும இது உலகத்திற்கு நற்பயனை விளைவிக்கு மென்றே தோற்றுகிறது. எனக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு எழுதியிருந்தது.

கனம்பொருந்திய மகாதேவகோவிந்தரானடே அவர்களுக்கு,
ஐயா!

இக்கடிதம் எழுதியோனைத் தாங்கள் அறியீர்களாயினும் அவன் தங்களை யறிந்தவர்களுள் ஒருவன். தங்களையறிந்ததுமட்டுமல்லாமல் தங்கள் புத்திசாதுர்யத்தையும் தங்களது விடாமுயற்சியையும், தாங்கள் பொதுநன்மைக்காக உழைத்தலையும் தன்மனத்துள் எண்ணிமிக்கார்வமடைந்து ஆனந்தக்கண்ணீர்பெருக்கியவன். தங்களைக் குருவாக மதித்தவன். தங்களை மகானென்றே கருதியவன்.

ஐயா! சிறியேனுடைய எனது துன்புற்ற வாழ்நாட்களின் சரிதத்தை இக்கடிதத்துடன்கூட அனுப்பியிருக்கிறேன். நானோ சென்னையில்வசித்துக்கொண்டிருந்த ஒரு சித்திரி. அநேகவிதமாய் நான் எனதுகூட்டத்தாரோடு வாழ்ந்துகொண்டிருக்கும்பொழுது, துன்பங்களை யனுபவித்தேன். பின்னர் நான் ஒருவருமில்லாதவிடத்திற்போயிருந்துகொண்டு எனது உயரிய சாஸ்திரவித்தையை நன்கறிந்துகொண்டு, நன்றாய்ச் சித்திரங்களெழுதி உலகிற்கு வெளியிடலாமென்றெண்ணி இமயமலைச்சாரலுக்குவந்து சேர்ந்தேன். என்னுடன்கூட எனது காதலியைத் தவிர வேறெவருமில்லை.

நான் எழுதியவற்றைத் தாங்கள் பார்த்திருக்கக்கூடும். மகாபாரதத்தில் கிருஷ்ணன் அருச்சுனனுக்கு உபதேசம்செய்வதுபோல எழுதியதைத் தங்களுக்கும் அனுப்பியிருக்கிறேன். என் மனைவியும் என்னுடன்கூட ஒத்தமனமுள்ளவளாய் எப்பொழுதும் எனக்கு எவ்விதத்தும் துணையாகவேயிருக்கிறாள்.

எனக்கு இப்பொழுது துன்பமொன்றுமில்லை. நான் முன்போலக் கவலையா விடர்படவில்லை. முன்போல மனமுருகிப் போகவில்லை. என்னவோ பகவானது கருணை என்மீதிற் சிறிதளவிருந்தது.

இனி எனக்கு உலகத்தாரோடு கூடியிருக்கவேண்டுமென்ற எண்ணம் சிறிதளவுமில்லை. என்னுலியன்றதை இங்கிருந்தே செய்யலாமென்று தீர்மானித்திருக்கிறேன். எனது காதலீயும் இவ்விதமே எண்ணங்கொண்டிருக்கிறாள். ஒருவேளை நாங்கள் உலகத்தாரோடு கூடவிருப்பதாக நிச்சயித்துத்திரும்பிவரினும் அது சமீபத்தில் நிகழ்வதன்று. அதற்குள் பகவத் சங்கல்பம் என்னவா யிருக்குமோ என்னவோ? ஆதலின் என்னுடைய வாழ்நாட்களின் சரிதத்தை உலகத்தோருக்குப் பயன்படுமென்றெண்ணி எழுதலாயினேன். அதை

வேறு எவரிடத்தும் நம்பிக் கொடுப்பதற்கு எனக்கு இஷ்டமில்லை. ஆதலின், தங்களிடம் அதை யனுப்பினேன்.

ஐயா! எனது வேண்டுகோளுக்குத் தாங்கள் தடையின்றி இணங்குவீர்களெனக் கருதியிருக்கிறேன். இது தங்கள் கையிற்கிடைத்தவுடனே அச்சிடுவிக்கவேண்டும். தாங்கள் காலதாமதம் செய்யாமலிருக்கவேண்டுமென்று தங்களைத் தயவுசெய்துகேட்டுக்கொள்ளுகிறேன். இனி ஒருவருடனும் போக்குவரவு வைத்துக்கொள்வதற்கு எனக்கு இஷ்டமில்லை. என்மீது கருணைகூர்ந்து என் வேண்டுகோளுக்கு இணங்குவீர்களென்ற எண்ணத்துடன் நான் கவலையற்றிருக்கிறேன். தங்களைநான் தொந்தரவு செய்வதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம் :
தங்கள் ஊழியன்,
இராமானுஜாசாரியன்.

ஹிமாசலம்.
1899ஹு செப்டம்பர்மீ 10உ.

இப்பொழுது நான் சொல்ல வேண்டியது ஒன்றுமேயில்லை. இராமானுஜாசாரியரது சரித்திரமேவெகு அற்புதமாயிருக்குமென்பதற்குத்தடையில்லை. அவர் சரித்திரத்திற்கும் உங்களுக்கும் நான் குறுக்கே நிற்பானேன்? அவர் சரித்திரத்தையே வாசியுங்கள்.

இங்ஙனம் :
தங்கள் ஊழியன்,
மகாதேவகோவிந்த ரானடே.

பம்பாய்.
1899ஹு அக்டோபர்மீ 8உ.

அத்தியாயம் 2.

எனது சரித்திரத்தின் ஆரம்பம்.

நான் சென்னை இராஜதானியில் வெம்மணூரில் 18-வருஷத்தில் பிறந்தேன். எனது தந்தை அவ்வூரில் ஓர் வர்த்தகரிடம் உத்தியோகம் வகித்திருந்தார். அவருக்குத் தனது சிறிய குடும்பத்திற்கு வேண்டிய அளவிற்குமேல் வரும்படி யிருந்தது. அவ்வூரில் மிக உயர்ந்தோருள் ஒருவாலராயினும் அவர், அவ்வூரிலுள்ளாரால் மதிக்கப்பட்டு வந்தவர். ஒருவருடனும் வம்பிற்காவது சச்சரவுக்காவது போகமாட்டார். அப்படியிருக்க நான் முதற்புதல்வனகப்

பிறந்தேன். முதலில் பிள்ளையாகப் பிறந்ததனால் எங்கள் உறவினர் எல்லோரும் உற்சவம் கொண்டாடினார்கள். புண்யாவசனத்தன்றைக்கு வீட்டில் சாப்பிட்டெழுந்த ஜனத்தின் கணக்கு மூந்நூறுக்கு மேலிருக்கும். சிலமாதங்களுக்கெல்லாம் உயர்ந்த சம்பளத்துடன் எனது தந்தையை வேறோர் ஊருக்குப்போய்த்தமது வியாபாரத்தை ஏற்றுக்கொள்ளும்படி அவ்வியாபாரி அனுப்பினார். அப்புறம் எனது தந்தை அநேக இடங்களுக்கு அனுப்பப்பட்டார். எவ்விடத்தும் யாவராலும் நன்கு மதிக்கப்பட்டார். எனக்குத் தம்பிகள் சகோதரிகள் உண்டானார்கள். நாங்களெல்லோரும் எங்கள் உறவினர்களால் கொண்டாடப்பட்டோம். எனக்கு ஏழுவயதாயிற்று. எனது தாய்தந்தையர்கள் நான் இங்கிலீஷ் படிக்கவேண்டுமென்று நிரம்பவும் எண்ணங் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்கள் மதுரையிலிருக்கவே என்னை "நேடிவ் காலேஜ்" க்கு அனுப்பினார்கள். அங்கு நான் அநேகம் பரிசுகள் பெற்றேன். எல்லா வகுப்பிலும் முதலாகவே யிருந்துவந்தேன். அப்புறம் எனது தந்தையை ஒருகிராமத்திற்கு மாற்றிவிடவே, என்னைக்கும்பகோணம் "டவுன் ஹைஸ்கூ" லுக்கு அனுப்பினார்கள். அவ்விடத்தில் நான் முன்போல வகுப்பில் முதலாகவில்லை, இப்பொழுது ஒவ்வொரு வகுப்பிலும் கடைசியாகவே யிருந்தேன் கணக்கு முழுவதையுமே மறந்தேன். கோயிலுக்குத் தவராமற் போய்க்கொண்டிருந்தேன். எக்கோயிலில் உத்ஸவம் நடந்தாலும் என்னை முன்னிட்டுக்கொண்டு தான் ஸ்வாமி புறப்படுவார். எனக்குத் தோழர்கள் அநேகர். நாங்கள் இரண்டு மூன்று பெயராகக்கூடி எத்தனையோ தரம் கூட்டத்திற்போவோரை காலாலிடறிக் கீழேதள்ளி யிருக்கிறோம். கீழேவிழுந்தவர் எழுந்து பார்ப்பதன்முன்னர், இருந்த விடங்கூடத் தெரியாதுமறைந்து விடுவோம். பள்ளிக்கூடத்திலோ எப்பொழுதும் பலகையின் மேலேறி நிற்பதுதான். ஒரு பாடமாவது படித்துக்கொண்டு போவதில்லை. உபாத்தியாயர் மிகச்சினந்து எங்களை அடிப்பதுண்டு. சிலசமயங்களில் அவர் குட்டியவிடம் நான்கு நாட்களுக்கு வீங்கியிருக்கும். ஆனால்இவையெல்லாம் எங்களுக்கு லக்ஷியமேயில்லை. பரீக்ஷையின் பொழுதுமாத்திரம் சிலநாட்களுக்கு ஓயாது இரவு பகலாய் வாசிப்போம், பரீக்ஷையில் காவற்காக்கும் உபாத்தியாயர் சிறிதேனும், அறிந்துகொள்ளாவண்ணம், நாங்கள் ஒருவர் எழுதியதைப் பார்த்து மற்றொருவர் எழுதிவிடுவோம். பாம்புங்கோளாதபடி ஒரு

வரை யொருவர் சந்தேகம் கேட்டுக்கொள்ளுவோம். காவற்காப்ப வர் மிகக்கெட்டிக்காரராயிருந்தாலிடினும், பேனாவின் போக்கைக் கடைக்கண்ணால் பார்த்து, ஒருவர் எழுதியபடி மற்றொருவர் எழுதிவிடுவதுண்டு. கடைசியாய்க் கண்டிப்பாய் நாங்கள் வருஷ இறுதியில் மேல்வகுப்பிற்கு அனுப்பப்படுவோம்.

எனக்குப் பதினைந்து வயது ஆனவுடனே, எனக்குக்கல்யாணம் செய்துவைக்கவேண்டுமென்று எனது உறவினர்கள் தீர்மானித்தார்கள். என்ன பிழை செய்தேனோ தெரியவில்லை. எனக்கு எப்படியாவது கால்கட்டு கட்டிவிட வேண்டுமென்றார்கள். நான் அதிகமாய் விவரிக்கவேண்டாம். அக்கட்டில் அகப்படாமலிருக்க நான் எவ்வளவு முயன்றும், எனக்குக் கால்கட்டேகட்டிவிட்டார்கள். எப்பேர்பட்ட கால்கட்டு தெரியுமோ? கரிய பருத்த விகாரமாய்க்கரடு முரடாயிருக்கும் இரும்புவளையங்களாலாய கால்க்கட்டு. அதைநினைத்து நினைத்து, என் மனம் புழுங்கிக் கொண்டேயிருந்தது. ஆயினும் எனது பெரியோர்கள் ஏதோ ஒரு பெண்ணை எனக்குக் கல்யாணஞ் செய்வித்தார்கள். அப்புறம் அப்பெண்ணுக்கு என்னைத் தவிர வேறு கதியில்லை. ஆகையின், எனக்கும் அப்பெண்ணைத் தவிர வேறுகதியில்லை யென்றெண்ணி ஒத்துப் போவோமென நினைத்து, நான் அடிக்கடிபோய் எனது வேட்டகத்தை யடைவதுண்டு. எனது கடைக்கண்ணால் எனது மனைவியைப் பார்த்து ரொம்பவும் அழகானவள் இவள்தான் என்று நினைத்துக் கொண்டதும் உண்டு. வாசற்றிண்ணையில் படுத்துக்கொண்டு யார்வரினும் எனது மனைவிதான் வருகிறாள் என நினைத்து அவர்களைக்கூட கடைக்கண்ணாற் பார்ப்பது தான். இப்படியும் கொஞ்சகாலம் கழிந்தது.

அதற்குள் கும்பகோணமிருந்து திருச்சிராப்பள்ளி போய் எப். ஏ. வகுப்பில் சேர்ந்து படித்தேன்; பரீக்ஷையும் தேறிற்று. உடனே சென்னைக்குப் புறப்பட்டுவந்து வாசித்தேன். ராஜதானிகலாசாலையிற் சேர்ந்து பி. ஏ. பரீக்ஷையும் தேறினேன். அதற்குள் எனது தகப்பனார் எங்களுடைய சொந்த ஊராகிய மதுரைக்கு வந்து சேர்ந்தார்.

அத்தியாயம். 3.

எனது சரித்திரம்.

இவ்வருஷங்களுக்குள்ளே எங்களது குடும்பத்துக்கு அநேக விபத்துக்கள் நேர்ந்தன. எனது தாய் இறந்தாள்; அதற்குச் சற்று முன்னும் பின்னுமாக எனது சகோதரருள் ஒருவரும் எனது சகோதரிகளுள் மூவரும் இறந்தார்கள். கல்யாண முதலிய சிலவுமிகுதியாற் கையிலிருந்த திரவியமும் அநேகமாய்ச் செலவழிந்து போய் விட்டது. இன்னும் எங்களிடம் கடன் வாங்கியிருந்த ஒருவன் இரண்டாயிரம் ரூபாயையெடுத்துக்கொண்டு எங்களை மோசஞ்செய்து விட்டான்.

எனக்குப் பி. ஏ. பரீக்ஷை தேறியதும், எனக்கு என்னசெய்வதென்று தெரியவில்லை. யாரைக்கேட்டாலும் அவரவர்களுக்குத் தோற்றியவாறு சொல்லுகிறார்கள். எனக்குச் சிறுபிராயத்திலேயே சித்திரத்திலும் சித்திரமெழுதுவதிலும் அதிகப்பிரியம் உண்டு. நான் சித்திரமெழுதக் கற்றுக்கொண்டிருக்கிறேன் என்றாலோ, எல்லோரும் பரிகாசஞ்செய்வார்கள். ஆகையால் நான் சென்னைக்கிறிஸ்தவன் கலாசாலையில் எம். ஏ. படிப்பதற்காகச்சேர்ந்திருக்கிறேன் எனச் சொல்லிச் சேர்ந்தேன். ஆனால் நான்சற்றாவது எம். ஏ. வுக்காக முயன்று படிக்கவேயில்லை. நான் எப்பொழுதும் சித்திரமே எழுதிக் கொண்டிருந்தேன். ராபேல், ம்யுரில்லோ, ரெம்ப்ரான்டஹால்பெய்ன் முதலியோர் எழுதியதை எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருப்பதிலேயே எனக்குத் திருப்தி. நான் சென்னையில் லிங்கிசெட்டி தெருவில் 330-ம் வீட்டில் குடியிருந்தேன். என்னுடன்கூட எனது சிநேகிதர்கள் இருவர் இருந்தார்கள். ஒருவன் சட்டப்பரீக்ஷைக்குப் படித்துக் கொண்டிருந்தான். மற்றொருவன் வைத்திய சாஸ்திரம் கற்றுக் கொண்டிருந்தான். இவர்களை நான் நிரம்பவும் ஆப்தர்களாக வைத்திருந்தேன். ஆனால் கடைசியிலோ எனக்கு ஒருவரிடமும் பிடிமானமில்லை. ஆயினும் இவர்களைவிட வேண்டியவர்கள் வேறொருவரும் எனக்கு இருக்கவில்லை. இப்படியிருக்கும்பொழுது நான் ஊரைப்பற்றியாவது எனது மனைவியைப் பற்றியாவது நினைத்ததேயில்லை.

இதனடியுள்ள எனது நம்பிக்கையில் எத்தனையோ மாறுபாடுகள் உண்டாயின. ஒரு சமயம் கடவுள் இல்லையென நினைத்தேன். மற்றோர் சமயம் கடவுள் உண்டென்று நினைத்தேன். ஒரு சமயம் மந்திர முதலியவைகளுக்குப் பலன் உண்டென நினைத்தேன். மற்றோர் சமயத்தில் இவை பயனில வென்றறிந்தேன். சிலபொழுதுகளுக்கு கோயிற்களுக்குப் போய்க்கொண்டு வருவேன். சிலபொழுதுகளுக்கு, கல்லையும் வெண்கலத்தையும் தரிசிப்பானேனென்று சும்மா விருந்துவிடுவேன். இவ்விதம் எனது மனம் குரங்கைப்போன்று நின்ற விடத்தில் நில்லாது ஓடிக்கொண்டிருந்தது.

எனது இளமைப் பருவத்தில் எனக்குத்தர்ஜனசகவாசசம்பிரமபவும் உண்டு. நான் இருந்த ஊர்களிலெல்லாம் நாடகங்கள்கூடவேயிருந்தன. நானும் எனது சிநேகிதர்களும் பிரதி ராத்திரியும் நாடகத்திற்குப் போவதற்குத் தவறுவதேயில்லை. அநேகமாய் எங்களுக்குப் பணம் கிடையாதாகையால், நாடகப்பந்தரினுள்ளே அநேக விதமான திருட்டுவழிகளால் உள்ளே நுழைந்துவிடுவோம். அகப்பட்டுக்கொண்டு அடிபட்டதும் உண்டு. பாகவதர்கள் கதை செய்தாலும் நாங்கள் போகாத கதை யகப்படுவதரிது. இவ்விஷயங்களெல்லாம் கும்பகோணம், திருச்சிராப்பள்ளியோடு நின்று போய்விட்டன.

எனக்குப் பரீக்ஷைகள் தேறும் வரையில் வீண்வம்பு வளர்ப்பதில் எனக்குஅதிகப்பிரியம் உண்டு அதற்குத் தகுந்த சிநேகிதர்களும் அநேகர் வாய்த்தார்கள். ஊரில் எவ்விஷயம் நடந்தாலும் எங்களுக்கு அது தெரியாமலிருப்பதரிது. பத்திரிகைகளை தினம் தினம் தவறாது பார்த்து வருவோம். என்னதினாலோ இந்தியன் நாஷனல் காங்கிரஸ், ஜனசமூக சீர்திருத்தம் இவ்விரண்டிலும் எங்களுக்கு நிரம்பவும் ஆசை உண்டாயிற்று. இவைகளை ஒட்டி நடக்கும் கூட்டங்களுக்குத் தவறாதுபோய் வருவோம். இவைகளைப்பற்றி எங்களுக்கு ஒன்றும தெரியாதாயினும் இவைகளைப் பற்றி யாரேனும் இகழ்ந்து பேசுவாராகில் எங்களுக்கு மிகுந்த கோபம் வந்துவிடும். "காங்கிரஸ் என்ன என்ன செய்திருக்கிறது? சொல்லு" என்று எங்கள் எதிரிகள் கேட்பார்கள். எங்களுக்குத் தெரிந்தவரையில் பதிற் சொல்லுவோம். ஒருபொழுதாவது சம்பாஷணை வலுக்காமலிருந்ததில்லை. சம்பாஷணை

முடிவில் ஒருவரை யொருவர் திட்டிக்கொண்டு எழுந்துபோவது சாதாரணம். வேறு சிலசமயங்களில் எங்களுடன் சம்பாஷிப்பவரை அடித்து விடுவதுமுண்டு. ஆனால் ஓடுவதற்குத் தயார் செய்து கொண்ட பிறகுதான் எதிரியை அடிப்போம. எதிரி அடியைத் துடைத்துக்கொண்டு எழுந்து வருவதன் முன்னர் பறந்து போய் விடுவோம். நாளாக நாளாக இத்துர்நடத்தையெல்லாம் என்னிடமிருந்து நீங்கிக்கொண்டிருந்தது.

இவையெல்லாம் நிற்க.

சென்னை - 600090.

* * * * * *

ஒருநாள் சாயங்காலம் நானும் எனது சிநேகிதர்கள் இருவருமாகிய விசுவநாதனும், ராகவனும், சென்னைக் கடற்கரைக்குப்போனோம். எங்கள் அறையை நன்றாகச் சாத்திப் பூட்டிக்கொண்டு லிங்கிசெட்டித் தெருவின் வழியே வந்து கிழக்கே திரும்பினோம். அப்பொழுது பிற்பகற் பொழுது. சூரியனும் காணப்படவில்லை, சந்திரனும் காணப்படவில்லை. சமுத்திரத்தினது அலை கரையில் மோதும் ஓசை காதையடைந்தது. வருகிறவழியில் மின்சாரவண்டியும், புகைவண்டியும் எங்களைச் சற்று நேரம் பாதையில் நிற்கும் படிச் செய்தது, நாங்கள்போய் தண்ணீரண்டை மணலில் உட்கார்ந்தோம். சற்று நேரத்துக்கு மூவரும் வெவ்வேறு காரியங்கள் செய்துகொண்டிருந்தோம். எனது பக்கத்தில உட்கார்ந்துகொண்டிருந்த விசுவநாதன் அச்சமயத்தில மணலினுட் புகுந்த ஞெண்டின் ஒருகாலைப்பிடித்து வெளியே இழுக்கிறான். அஞ்ஞெண்டோமணலினுள்ளே இழுக்கிறது. இராகவனோ, தனது ஆடையை முழந்தாளுக்குமேலே தூக்கிக்கொண்டு தண்ணீரின்மேலேபோய்நின்றுகொண்டு, தண்ணீர்மேலேவந் தடிக்கும்போதெல்லாம் ஆனந்தக் கூச்சலிட்டுக்கொண்டிருந்தான். நானோ, அவ்விடங்கிடந்த கிளிஞ்சல்களையெடுத்து நாலாபுறமும்விட்டெறிந்துகொண்டு என்னவோயோசித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது அவ்வழியாக ஒரு வெள்ளையனும் அவன்

மனைவியும் ஒருவர் கையை ஒருவர் கோத்துக்கொண்டு தண்ணீர் ஓரமாகப் போய்க்கொண்டிருந்தார்கள். ராகவன் உடனே வந்து என் பக்கலில் உட்கார்ந்துகொண்டு,

"பார்த்தாயா அவ்விருவரையும்?" என்றான்.

கனவிலிருந்து திடீரென்று விழித்தவன்போல, இங்குமங்கும் பார்த்துக்கொண்டு "யாரை" என்றேன்.

அச்சமயத்தில் இனி அஞ்ஞெண்டுடன் யுத்தஞ்செய்வது வீணென்று நினைத்து, அஞ்ஞெண்டின் காலைவிட்ட விசுவநாதன் "என்ன? என்ன?" என்றான்.

இராகவன் "உபயோக மற்றவர்களாயிருக்கிறீர்களே!" எனவே,

"சமாசாரத்தைச்சொல்" என்றான் விசுவநாதன்.

"அதோபார்."

"என்ன?"

"தெரியவில்லை?"

"ஆமாம். ஆமாம்"

"இருவரைத்தானே சொல்லுகிறீர்கள்?" என்றேன்.

"ஆமாம்" என்றார்கள் இருவரும்.

"அதற்கென்ன?"

"இப்படி நம்நாடு என்றைக்குவருமோ?" என்றான் இராகவன்.

"அந்நிலையிலிருப்பது நம் நாட்டிற்கு உயர்ச்சியைத் தருவதோ?" என்றேன்.

"இல்லையோ?"

"என்ன?"

"பெண்பிள்ளையை மிருகம் மாதிரி யன்றோ நாம் நடத்துகிறோம்?"

"அவர்கள் படியாதிருத்தலால் வரும் கேடன்றோ அது. அவர்கள் நம்மைப்போன்றும் படித்தார்களே யானால் அவர்களுக்கும் சுயர்ச்சை கொடுக்கலாம்."

"அக்குற்றம் யார்மேல் உளது?"

"அஃது என்னவோ அவர்கள் படிக்கவில்லை. நமது தேசத்துப் பெண்களுக்கு இவ்விதம் சுயர்ச்சை கொடுத்தல் நன்றன்று. அது தீமையையே விளைவிக்கும்."

"நான் சொல்வதைக்கேளு. குற்றம் யார்மேல்?"

"எல்லார்மேலும்தான்."

"நீ, படி யென்றபோது அவர்கள் படிக்கமாட்டேன் என்ருர்களோ? ஏன் அப்பா?"

"இல்—லை."

"பின்னை, என்ன சொல்லுகிருய்?"

"நீயாக அவர்களுக்காகக் கஷ்டப்படுகிருயே யொழிய, அவர்களுக்கு அவ்வித எண்ணமொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை."

"வெகு நன்ருயிருக்கிறது. நீ குழந்தையாயிருக்கும்பொழுது "அப்பா! நான் பள்ளிக்கூடம் போகவேண்டு" மென்று சொன்ன பிறகுதான், உன்னைத் தகப்பனர் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிருரோ? ஏன் அப்பா! எத்தனையோ பெயர்கள் தங்களது தந்தைகள் தங்களைச் சரியான வயதிற் படிக்கவைக்காதிருந்ததற்காக வையுவது தெரிந்திருக்கலாமே."

"அப்படியாவது எப் பெண் பிள்ளையாவது வயதான பிறகாவது எங்களைப் படிப்பிக்கவில்லையே என்று வருத்தப்படுகிறதைக் கேள்வியுற்றிருக்கிருயோ?"

"அப்படி வருத்தப்படும் அநேகரை நான் கண்ணுலே கண்டிருக்கிறேன்" என்ருன், இந்நேரஞ் சும்மாவிருந்த விசுவநாதன்.

"அது மிகக்குறைந்த எண்ணுயிருக்கும்" என்றேன்.

"ஒருபெண் அப்படியிருந்தாலும் போதும்" என்ருன் ராகவன்.

"அது உலகத்தில் ஆச்சரியங்களைச் சேர்ந்தது."

"சற்றுப்பொறு! சற்றுப்பொறு! மறந்துபோய்விட்டேன். யார் யாருக்கு எது எது பழக்கமோ அததிலன்றே அவரவர்களுக்குப் புத்திசெல்லும். படிப்பு இன்னதென்றும், படிப்பதனுலுண்டாய நன்மைகளின்னவை யென்றும் தெரியும்படியான மார்க்கத்திலே அவர்களை வைக்கவில்லையே."

"அவர்கள் அதைப்பற்றி நினையாதிருக்கும்பொழுது நாம் அதை அவர்களுக்கு ஏன் புகட்டவேண்டும்?"

"ஹா! ஹா!! ஹா!!!"

"என்ன சிரிக்கிருய்?"

"மரமாயிருப்பதிலும் புழுவாயிருப்பது உயர்ந்தது எனக் கேட்டிருக்கிருயோ?"

"ஏன்?"

"உயிரில்லா வஸ்துவைவிட உயிருள்ள வஸ்து உயர்ந்ததன்றோ?"

"இருக்கட்டும்."

"உயிருள்ளவைகளுள்."

"என்ன?"

"பகுத்தறிவுடையவற்றைவிட பகுத்தறிவில்லாதவை மிகத் தாழ்ந்தவையன்றோ?"

"சரிதான்' என நீட்டினேன்.

"சற்றிரு; அப்புறம் உனது நீட்டலை நீட்டலாம்."

"முடிவைச் சொல்லு."

"இதோவந்துவிட்டேன். ஒன்றும் தெரியாதஜடம் போன்று நாம் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருப்பதன்றோ நல்லதென்கிறாய்?"

"யாருக்கு?"

"நமது பெண்பிள்ளைகளுக்குத்தான்."

"ஆமாம், இல்லை; இல்லை."

"இல்லையென்ன. இப்பொழுது இருக்கிற நிலையை மாற்றவேண்டுவது அனுவசியம் என்றுசொன்னாயல்லவோ?"

"ஆமாம்."

"பின்னையென்ன?"

"நான்——"

"நீ அதை அவர்களுக்குப் புகட்டுவானேன் என்று கேட்டாயோ இல்லையோ? உண்டு. இல்லை. இவ்விரண்டனுள் ஒன்று சொல்லு."

"இதோ சொல்லுகிறேன்."

"வேறு எதையும் நான் அங்கீகரிக்கமாட்டேன்."

"உண்டு. அப்புறம்."

"சரி. அப்படிவா. பெண்பிள்ளைகள் நன்றாகப் படித்து, இன்னவை தீமையைப் பயக்கும் என்பவற்றை யறிந்து அவர்கள் காரியங்களைச் செய்யத் தொடங்கினால்—"

"தொடங்கினாலன்றோ?"

"படித்தாலன்றோ" என்றான் குறுக்கே விசுவநாதன்.

"அது யார் முயற்சியாலாக வேண்டியது?" என்றான் ராகவன்

"நமது முயற்சியால்தான்."

"நமது-என்றால்?"

"புருஷர்தான்."

"ஏன் அப்பா! ராமானுஜா என்ன சொல்லுகிறாய்?"

"எனக்கு என்னவோ—" எனறேன்.

"கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை; என்ற செய்தியாய்ப் பேசுகிறாயே?"

"என்னவோ அப்பா யோசித்துப் பார்க்கவேண்டும்."

"நன்றாய் யோசித்துப்பார்."

"எனக்கு, பெண்ணுக்கு ஆண் உயர்ந்தே இருக்கவேண்டுமெனத் தோற்றுகிறது."

"ஏனோ?" என்றான் விசுவநாதன்.

"பெண் பிள்ளைகளை இஷ்டப்படி விட்டுவிட்டால், அவர்களுத் தங்களை யடக்கிக்கொள்ளத் தெரியாது."

"எப்பொழுது அவர்களுக்கு நீ சுயர்ச்சை கொடுத்துப் பார்த்தாய்? நீ இது சொல்லுவதற்கு ஆதாரம் எனனை?"

"இப்பொழுதே அவர்கள் நகை வேண்டும் நல்ல புடவை வேண்டுமென்றும் என்ன பிடிவாதம் பிடிக்கிறார்கள் தெரியுமா?"

"படிப்பில்லாததுதான் அதற்குக் காரணம்."

"படிப்பிருந்தால் மாத்திரம் அவ்வாசை யெல்லாம் எங்குபோய் விடும்?"

"சுத்த பைத்தியக்காரனு யிருக்கிறாயே? நன்றாகப் படித்தவனுக்கும், கொஞ்சம் படித்தவனுக்கும் உள்ள பேதத்தை நீயே எனக்குப் பலதரம் எடுத்துச் சொல்லியிருக்கிறாயே?"

"ஆமாம்—"

"பின்னையென்ன?"

"அரைப்படிப்பு படித்த பெண்பிள்ளைகளெல்லாம் வீணையன்றோ போய்விடுவார்கள்?"

"எல்லோரும் மூடர்களா யிருப்பதைவிட, சிலராவது படித்தவராயிருப்பது நன்றன்றோ?"

"ஆமாம், அரைப் படிப்புக்காரன் படியாதவனைவிடவன்றோ கெட்டுப்போகிறான்."

"இருக்கட்டுமே. அதற்காக ஒருவருமே படிக்கவேண்டாமென்று சொல்லிவிடுவாயா? அப்படி நீ சொல்லிவிடு; நானும் பெண்

பிள்ளைகளுக்குக் கல்வி வேண்டாமென்பதையுஞ் சரியென ஒப்புக்கொள்ளுவேன்."

"அப்படிச் சொல்லலாமா?"

"என்ன? ஒரு முடிவிற்கும் வரமாட்டேன் என்கிறாயே?"

"அப்புறம் யோசித்துச் சொல்லுகிறேன்" என நான் சொல்லவே, எல்லோருமாகப் புறப்பட்டு வீடுபோய்ச் சேர்ந்தோம்.

அன்றைக்குப் பதினேந்தாவதுநாள் சாயங்காலம் நான் எனது சிநேகிதரிடம் விடைபெற்றுக்கொண்டு மதுரை போய்ச் சேர்ந்தேன். சில நாட்களுக்கெல்லாம் எனக்குத் தனியாகக் குடும்பமொன்றும் ஏற்பட்டது. நான் வேண்டாம் என்று சொல்லி மறுத்தும் எனக்குக் கால்கட்டாகக் கட்டிய மனைவியுடன்கூட சில நாட்களும் இருந்தேன். எனக்கு அப்பொழுது வேலைத் தொந்தரவு நிரம்பவும் இருந்தமையால் நான் ஊரைவிட்டுக் கிராமங்களுக்குப் போகும்படி நேரிட்டது. எனது காரியங்களை முடித்துக்கொண்டு வருவதற்கு ஒருமாதமாயிற்று. திரும்பவும் வந்து எனது மனையாளுடன் கூடி யிருக்கவேண்டுமென்ற ஆசை மேலிட்டு ஊர் வந்து சேர்ந்தேன். எனக்குக் குடும்பத்தில் வெறுப்பு வந்துவிட்டது. எனக்கும் எனது மனைவிக்கும் ஒத்துக்கொள்ளவேயில்லை. சரியாய் மிருகம்போலவே யிருந்தாள். மிருகத்திற் சில சாது மிருகங்களுண்டு. சில அடித்தாற்றான் நாம் சொன்னபடி கேட்கும். மற்ற விஷயங்களில் அது நமக்குப் பயன்பட்டபோதிலும், அது பகுத்தறிவுடையதன்று. அப்பொழுதுதான் அன்று என் சிநேகிதர் சொல்லியவைகள் என் மனதிற்கு தோற்றின. மேலும், எனக்கு மதுரையில் இருப்பதற்கே மனமில்லை, இன்னமும் குடும்பத்தில் அநேக அசந்தர்ப்பங்களும் நிகழ்ந்தன. எதையும் எனது காதிற் போட்டுக்கொள்ள இஷ்டமில்லாமல் சென்னைக்குப் புறப்பட்டு வந்துவிட்டேன். எப்பொழுதும் எனக்கு நிரம்பவுஞ் சந்தோஷத்தைக் கொடுப்பதாகிய வேலையான சித்திரமெழுதுவதிலேயே முனைந்திருந்தேன்.

கு. ரா ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

துர்க்க பூஜை.

மிகவும் அற்புதமானதோர் தமிழ்க்கதை.

கு. ரா. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், பி. ஏ.

இயற்றியது.

ஃ

துர்க்கபூஜை.

துர்க்கபூஜை.

துர்க்கபூஜை.

துர்க்கபூஜை.

துர்க்கபூஜை.

துர்க்கபூஜை.

துர்க்கபூஜை.

விலை அணா 8.

வேண்டியோர், சென்னை புரசைபாக்கம் வெள்ளாளவீதி 23-ம் நம்பர் வீட்டிலிருக்கும் ஆர். ரெங்கசாமிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

PRINTED AT THE V. N. JUBILEE PRESS, MADRAS.